**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 138/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 2 |
| Name : | திருமதி. அலமேலு |
| Father's Name/Husband Name: | திரு. ரெங்கசாமி |
| Village : | பாண்டகபாடி |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 55 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 13.11.2025

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ருக்குமணி எனது மகள். எதிரிகள் அனைவரையும் தெரியும். எனது மகள் ருக்குமணி எதிரி சுந்தரத்திடம் 10 லட்சம் ரூபாய்க்கு சீட்டு கட்டி வந்தார். என் மகள் என் பெயரிலும், என் மகள் ருக்குமணி பெயரிலும் மேற்படி சீட்டு கட்டி வந்தார் வேறு யார் யார் சீட்டி கட்டி வந்தார் என்று எனக்கு தெரியாது. குடும்ப செலவிற்காக மேற்படி சீட்டுத் தொகையை என் மகள் ருக்குமணி ஏலத்தில் எடுத்துவிட்டார். அவ்வாறு ஏலத்தில் எடுத்த பிறகு எனது மகள் ருக்குமணி தவணை தொகைகளை தவறாமல் கட்டி வந்தார். போன வருடம் வைகாசி மாதம் எனது மகள் ருக்குமணியால் தவணைத் தொகையை கட்ட இயலவில்லை. என் மகள் ருக்குமணியை எதிரி பொன்னுசாமி சீட்டு கட்டும் இடத்திற்கு அழைத்துச் சென்றார். சம்பவம் நடந்து எவ்வளவு நாட்கள் இருக்குமென்று நான் படிக்காததால் எனக்கு தெரியவில்லை. பெரியவடகரையில் உள்ள சுந்தரம் என்பவரது கடைக்கு இரவு 9

மணியளவில் எங்கள் வீட்டிற்கு வந்து பொன்னுசாமி என் மகளை அழைத்துச் சென்றார். நானும் உடன் சென்றேன். அப்போது எதிரி சுந்தரம் சீட்டுக் கட்டடி தேவிடியா என்று அசிங்கமாக சொல்லி கட்டையால் என் மகளை அடிக்க வந்தார். எதிரி பொன்னுசாமி ஏண்டி தேவிடியா நீ எல்லாம் எதற்கு உயிரோடு இருக்கிறாய் குழியை தோண்டி சுடுகாட்டில் படுத்துக் கொள் என்று செருப்பை தூக்கி முகத்தில் அடித்துவிட்டார். எதிரி சிவக்குமார் என் மகளை ஏண்டி தேவிடியா உன் பல்லை உடைச்சி கையில கொடுத்துடுவேன் உன்னை கேட்க யார் வருவா, ஏண்டி உயிரோட இருக்கிற என்று தகாத வார்த்தைகளால் பேசினார். நான் என் மகன் வெங்கடேசனுக்கு தகவல் சொல்லி என் மகன்வெங்கடேசன் என் மகளை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார். எதிரி சுந்தரம் நோட்டு புத்தகத்தால் என்னை தலையில் அடித்தார். என் மகள் ருக்குமணி வீட்டிற்கு வந்து உமட்டிக் கொண்டிருந்தார் என்னவென்று பார்த்த போது எனது பேத்தி எனது மகள் மருந்து குடித்துவிட்டதாக சொன்னார். அதன்பிறகு 108 ஆம்புலன்சு மூலமாக எனது மகள் ருக்குமணியை பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தோம். என் மகள் அளித்த புகார் சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. எனது மகள் சுந்தரம் கடைக்கு மளிகை பொருட்கள் வாங்க சென்றார் என்றால் சரியல்ல இரவு 9 மணிக்கு எதிரி பொன்னுசாமி என்பவர் காரில் வந்து எனது மகளை அழைத்துச் சென்றார் நான் பின்னால் சென்றேன். அங்கு என்ன நடந்தது என்றால் அங்கு எதிரிகள் சீட்டுத் தொகையை கேட்டு பிரச்சனை செய்தார்கள். எனது மகள் வீடியோ எடுத்தாள் அதை எதிரிகள் தடுத்தனர். சம்பவம் நடக்கும்போது அங்கு யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் கூட்டம் அதிகமாக இருந்தது 200 பேர்கள் வரை இருந்திருப்பார்கள். போலிசார் என்றைக்கு எங்கு வந்து என்னை விசாரித்தார்கள் என்றால் எனது வீட்டில். எந்த தேதியில் போலிசார் விசாரித்தார்கள் என்றால் பிரச்சனை நடந்த பிறகு போலிசார் வந்து விசாரித்தனர். சம்பவம் நடக்கவில்லை என்றாலும், எனது மகளுக்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் எந்த தேதியில் எந்த நேரத்தில் நடந்தது என்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.